# பத்தாம் வகுப்பு – சமூக அறிவியல்
# முக்கிய 5 மதிப்பெண் வினா-விடை

## குடிமையியல்

**1. பஞ்சசீலம் மற்றும் அணிசேரா கொள்கை பற்றி எழுதுக.**

**பஞ்ச சீலம்**

பிரதமர் ஜவஹர்லால் நேரு அமைதிக்காக பின்பற்றிய ஐந்து அம்ச கொள்கைகள் - பஞ்சசீலம் என்றழைக்கப்படுகிறது.

1. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையை மதித்தல்
2. எந்த ஒரு நாடும் பிறநாட்டை தாக்கக் கூடாது.
3. எந்த ஒரு நாடும் மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது.
4. அனைத்து நாடுகளும் சமத்துவம் மற்றும் பரஸ்பர நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.
5. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கியிருத்தல் வேண்டும்.

**அணிசேராக் கொள்கை**

1. இரண்டாம் உலகப் போருக்குப் பின் உலகம் அமெரிக்கா, ரஷ்யா தலைமையில் உலக நாடுகள் பிரிந்து பனிப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது.
2. இந்தியா, இரு வல்லரசு நாடுகளுடன் சேராமல் நடுநிலைமை வகிப்பது, அணிசேராக்கொள்கை.

**2. சார்க் அமைப்பு பற்றி சிறு குறிப்பு வரைக.**

1. **தோற்றம்**

   சார்க் அமைப்பு 1985 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
2. **விரிவாக்கம்**

   இது தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு என்று அழைக்கப்படுகிறது.
3. **பொது செயலாளர்**

   இதன் முதல் பொதுச் செயலாளர் ஆஷான் ஆவார்.
4. **உறுப்பு நாடுகள்**

   இதில் எட்டு உறுப்பு நாடுகள் உள்ளன.
   1. இந்தியா
   2. பாகிஸ்தான்
   3. நேபாளம்
   4. பூடான்
   5. பங்களாதேஷ்
   6. இலங்கை
   7. மாலத்தீவுகள் மற்றும்
   8. ஆப்கானிஸ்தான்.
5. **செயல்பாடுகள்**

   நாடுகள் தங்களுக்குள்
   1. போக்குவரத்து

2. கடித சேவை
3. சுற்றுலா
4. வானியல்
5. சுகாதாரம்
6. வேளாண்மை
7. கிராமபுனரமைப்பு மற்றும்
8. தகவல் தொடர்பு போன்றவற்றில் உதவி செய்து கொள்ளுதல்.

**3. நுகர்வோரைப் பாதுகாக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?**

1. **நுகர்வோர் கழகங்கள்**
   கல்வி நிறுவனங்களில் நுகர்வோர் கழகங்கள் அமைத்தல்
2. **குடியிருப்போர் சங்கங்கள்**
   ஊராட்சி பிரதி நிதிகள் மூலம் கிராமங்களிலும், நகரங்களில் குடியிருப்போர் சங்கங்களை உருவாக்குதல்
3. **கருத்தரங்குகள்**
   மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் கருத்தரங்குகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
4. **மாத இதழ்**
   "தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" மாத இதழின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
5. **பிரச்சாரம்**
   வானிலை , தொலைக்காட்சி மற்றும் குறும்படங்கள் மூலம் பொதுமக்களிடம் பிரச்சாரம் செய்தல்

**4. நுகர்வோர் உரிமைகள் பற்றி எழுதுக.**

1. **பொருட்களை பற்றிய அறிவு**
   பொருட்களின்
   1. தரம்
   2. அளவு
   3. தன்மை
   4. அதனுடைய உண்மை நிலை
   5. விலை ஆகியவற்றை தெளிவாக தெரியப்படுத்த வேண்டும்.
2. **நியாயமான விலை**
   பொருள்கள் நியாயமான விலையில் இருக்கிறதா, இல்லையா என்று சொல்வதற்கு உரிமை பெற்றுள்ளனர்.
3. **தீர்வு**
   நுகர்வோர் தங்களது குறைகளை எடுத்துக் கூறி தீர்வை பெறலாம்.
4. **தகவல் அறியும் சட்டம்**
   2005 அக்டோபர் 12ம் நாள் தகவல் அறியும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
5. **நடவடிக்கை**
   இதன் மூலம். மக்கள் அனைத்து நடவடிக்கைகளையும் அறிந்து கொள்கின்றனர்.
   இது அவர்களின் அடிப்படை உரிமையாகும்.